ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2364/31 - 2023 දෙසැම්බර් මස 29 වැනි සිකුරාදා - 2023.12.29

*2364/31 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 29 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி IV(அ) - மாகாண சபைகள்

### மாகாண சபை அறிவித்தல்கள்

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(இ) ஆம் உறுப்புரையுடன் வாசிக்கப்பட வேண்டிய மேல் மாகாண சபையின் 2015 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, பொருட்களை அடகுபிடிப்பவர்களின் நியதிச் சட்டத்தின் 9(2) ஆம் உப பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய மற்றும் அந்நியதிச் சட்டத்தின் 53 ஆம் பிரிவின் கீழ் தயாரிக்கப்பட்ட கட்டளை**

அரசியலமைப்பின் 154(இ) ஆம் உறுப்புரையுடன் வாசிக்கப்பட வேண்டிய மேல் மாகாண சபையின் 2015 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, பொருட்களை அடகுபிடிப்பவர்களின் நியதிச் சட்டத்தின் 9(2) ஆம் உப பிரிவு மற்றும் அந்த நியதிச் சட்டத்தின் 53 ஆம் பிரிவின் கீழ் மேல் மாகாண ஆளுநராக எனக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் தயாரிக்கப்படும் பின்வரும் கட்டளைகளை இங்கு வெளியிடுவதாக அறிவிக்கின்றேன். மேலும், இந்தக் கட்டளைகள் நடைமுறைக்கு வரவேண்டிய தினம் 2024, சனவரி 01 ஆந் திகதியாக வேண்டுமெனவும் மேலும் அறிவிக்கின்றேன்.

**றொஷான் குணதிலக,**
ஆர்டபிள்யூபி அண்ட் பார் வீஎஸ்வீ, யூஎஸ்பி,
பிஎச்டி (சிறப்பு), எப்ஜஎம் (இலங்கை), என்டிசீ, பீஎஸ்சீ,
இலங்கை விமானப் படையின் மார்ஷல்
ஆளுநர்
மேல் மாகாணம்.

மேல் மாகாண சபை கட்டடத்தில் அமைந்துள்ள,
மேல் மாகாண ஆளுநர் அலுவலகத்தில்,
பத்தரமுல்லை,
2023, திசெம்பர் 21.

1A - PG 6595 — 16 (2023/12)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**கட்டளைகள்**

1. இந்தக் கட்டளைகள் மேல் மாகாணத்தின் 2015 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க பொருட்களை அடகு பிடிப்பவர்களின் நியதிச் சட்டத்தின் கீழ் அடகு பிடிப்பவர்களின் வியாபாரத்தினைப் பதிவுசெய்வதற்கான உரிமத்தை வழங்குவதற்குரிய கட்டணத்தினைத் தீர்மானிப்பதற்கும் மற்றும் அடகுபிடிப்பவர்களின் வியாபாரத்திற்காக வைக்க வேண்டிய, வைப்புத் தொகையை நிர்ணயம் செய்வதற்கும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1937/ 20 ஆம் இலக்க மற்றும் 2015, ஒற்றோபர் 22 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் உள்ளடக்கப்பட்டிருந்த மேல் மாகாணத்தின் 2015 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க பொருட்களை அடகுபிடிப்பவர்களின் விதிகளை நீக்குவதற்கும் ஏற்பாடுகளை ஏற்படுத்துவதற்காக அமுல்படுத்தப்படுகின்றது.

2. இந்தக் கட்டளைகள் 2023 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க அடகுபிடிப்பவர்களின் வியாபாரம் தொடர்பான கட்டளைகள் என்று அழைக்கப்படும்.

3. மேல் மாகாணத்தின் 2015 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க அடகுபிடிப்பாளர்களின் நியதிச் சட்டத்தின் 07(03) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்காக அறவிடப்பட வேண்டிய கட்டணங்கள் மற்றும் வைப்புத் தொகைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு இருக்க வேண்டும்.

| விடயம் | பெறுமதி |
|---|---|
| (அ) அடகுபிடிப்பவர்களின் வியாபாரத்தினை பதிவுசெய்தல் | ரூ. 50,000.00 |
| (ஆ) அடகுபிடிப்பவர்களின் வியாபாரத்திற்கான வருடாந்த அனுமதிப்பத்திரக் கட்டணம் | ரூ. 25,000.00 |
| (இ) அடகு பிடிப்பவர்களின் வியாபாரத்தினை மேற்கொண்டு செல்வதற்காக செலுத்த வேண்டிய பாதுகாப்பு வைப்புத் தொகை | ரூ. 500,000.00 |

4. மேலே உள்ள பிரிவு 02 இன்கீழ் வைப்புச் செய்ய வேண்டிய தொகையானது, அரசுக்குச் சொந்தமான வங்கிகளான அதாவது, மக்கள் வங்கி, இலங்கை வங்கி மற்றும் தேசிய சேமிப்பு வங்கி ஆகியவற்றில் மட்டுமே வைப்புச் செய்யப்பட வேண்டும்.

5. இந்த விதிகள் நடைமுறைக்கு வரும் தினத்தில் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1937/ 20 ஆம் இலக்க, 2015 ஆம் ஆண்டின் ஒற்றோபர் மாதம் 22 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமான பத்திரிகையில் உள்ளடக்கப்பட்டிருந்த மேல் மாகாணத்தின் 2015 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க அடகு பிடிப்பவர்களின் விதிகள், அந்த விதிகளின் கீழ் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளுக்கு பாதிப்பு ஏற்படாதபடி இங்கு இல்லாதொழிக்கப்படுகின்றது.

6. இந்த விதிகளில் சிங்களம், ஆங்கிலம் மற்றும் தமிழ் சொற்களுக்கு இடையில் ஏதேனும் முரண்பாடு ஏற்பட்டால் சிங்கள உரையே மேலோங்கும்.

EOG 12-0390

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.